முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி

**முன்னிலை :- திரு.கே.பாஸ்கர், பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

திருவள்ளுவராண்டு, 2053 சுபகிருது வருடம், மார்கழி திங்கள், 26-ம் நாள்

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண். 2/2022 இன் அசல் வழக்கு எண். 289/2022**

(CNR No.TNTL110004102022)

தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, கீழப்புலியூர் ஊரில், உச்சிமாகாளியம்மன் கோவில் 1-ம் தெருவில் கதவு எண் 362/3-ல் குடியிருக்கும் பாடலிங்கம் குமாரர், 52 வயதுடைய பா. உலகநாதன்.

--- மனுதாரர் / வாதி

/எதிர்/

தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, கீழப்புலியூர் ஊரில், உச்சிமாகாளியம்மன் கோவில் 1-ம் தெருவில் கதவு எண் 363G-ல் குடியிருக்கும் சுடலைமுத்து மனைவி, சுமார் 50 வயதுடைய வேலம்மாள்.

--- எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு உறுதிக்கூற்றில் கண்டுள்ள காரணங்களினால், மனுதாரர், மனு தபசில் சொத்தினை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதி எவ்வகையிலும், எக்காலத்திலும், இடையூறு செய்யக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரருக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம், கட்டளை 39, விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 23.11.2022

மனு கோப்பிற்கு எடுத்த நாள் : 23.11.2022

இந்த மனு இந்நீதிமன்றம் முன்பாக 10.01.2023 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.R.K.பாண்டியராஜ் அவர்களும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சிவசக்திவேலு அவர்களும் முன்னிலையாகியும், பின்னர் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவாணை

1. இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.

2. செலவு தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.

(இருதரப்பிலும் செலவு விவரப்பட்டியல் தாக்கல் இல்லை)

## தபசில் விபரம்

தென்காசி பதிவு மாவட்டம், தென்காசி 2-ம் நம்பர் இணை சார்பதிவாளர் அலுவலகம், தென்காசி நகராட்சி எல்கைக்குள்பட்ட தென்காசி கிராமம் அயன் புஞ்சை சர்வே 1403 ம் நம்பர் ஏக்கர் 4 செண்டு 67 ல் வடபக்கம் கீழ்பக்கமாக செண்டு 81 ல் வடபாகத்தில் மேலோரம் செண்டு 4 க்கு சதுரடி 1742.40 க்கு சதுரமீட்டர் 161.872 உள்ள மனைக்கு எல்கை.

| | | |
|---|---|---|
| ஆ. சுப்பையாபிள்ளை வகையறா மனைக்கும் | - | கிழக்கு |
| மு. பொன்னம்பலம் ஆச்சாரி செண்டு 5 நிலத்திற்கும் | - | மேற்கு |
| ஆர். முத்துப்பிள்ளை வகையறா மனைக்கும் | - | தெற்கு |
| தெருவுக்காக கழித்துள்ள தென்வடல் அடி 8 உள்ள 5 செண்ட் கிழமேல் பொதுபாதைக்கும் | - | வடக்கு |

வை மனை தென்காசி தாலுகா, கீழப்புலியூர் உச்சிமாகாளி அம்மன் 1-ம் தெருவில் தென்காசி நகராட்சி 31வது வார்டில் உள்ளதும் தபசில் விவரம் சரி. மேற்படி மனையில் உள்ள வடக்கு பார்த்த வீடு ஒன்றும், அதன் கதவுநிலை மேல்கோப்பு சாமான்களும், மின் இணைப்பு வகையறாவும்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**ஒம்./- திரு. கே. பாஸ்கர்,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**தென்காசி.**